**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**OS No: 209/2022** **தேதி: 17.06.2026**

**வா.சா.9 – பாலசுப்பிரமணியன்**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த வழக்கில் ஏற்கனவே என்னுடைய சாட்சியத்தை அளித்துள்ளேன். தற்போது அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நான் இந்த வழக்கில் 2ம் வாதி தேவராஜ், 9, 10, பிரதிவாதிகள் மீது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகார் மற்றும் அதில் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய கோப்புகள் அது **சா.சா.ஆ 16**. மேற்படி விசாரணையில் 2ம் வாதி தேவராஜீக்கு அழைப்பாணை அனுப்பாமல் 9, 10 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாக்குமூலத்தில் தாவா சொத்து சம்பந்தமாக 9, 10 பிரதிவாதிகள் அருப்புக்கோட்டை, சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்றம் மூலம் தீர்வு கண்டுகொள்வதாக சொல்லியுள்ளார். என்னுடைய ஆவணத்தை சீர்திருத்தம் செய்து தருகிறேன் என்றும் கூறியுள்ளார்.

1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் பிரதிநிதிதுவம் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>5, 6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 17–ம் நாள் வாதி (பிரதிவாதி) சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – குருவையா (Pw10) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

நான் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மாவட்ட வருவாய் அதிகாரிக்கு வந்த அழைப்பாணையின் பேரில் நான் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். 16.09.2022ம் தேதி விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வாதிகள் ராஜேந்திரன், தேவராஜ் ஆகியோருக்கு அனுப்பிய அறிவிப்பு **சா.சா.ஆ 17**. அதில் பிறப்பித்த உத்தரவு **சா.சா.ஆ 18**. மேற்படி அழைப்பாணையானது ராஜசேகர், ஆனந்த், பாண்டியன், ராஜேந்திரன், தேவராஜ் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது. சா.சா.ஆ 17, 18 ஆவணங்களில் யார் மனுதாரர் , எதிர்மனுதாரர் என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர்கள் ராஜசேகரன், ஆனந்த், பாண்டியன், எதிர்மனுதாரர்கள் தேவராஜ், ராஜேந்திரன். மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் ஆகியோர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் தாவா புல எண். 108/2 ஏ விற்கான பட்டா எண்.1112 வி.சேகர் மற்றும் 108/2 பி அதற்கான பட்டா எண். 98

தி.கணபதி என்பவர் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து SLR ல் உள்ளவாறு முனியாண்டி, ராமு என்ற பெயரில் பட்டா தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுவாக பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்றால் பட்டா சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் மற்றும் அதன் தொடர்புடைய நபர்களுக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்து அதன் பின்னர் தான் பட்டா மாறுதலோ, ரத்து செய்வதோ செய்யப்படும். பட்டாவின் முன் உரிமையாளர்களான சேகர் மற்றும் கணபதி ஆகியோர்களிடம் இருந்து இவர்கள் தான் வாரிசு என்று வாரிசு சான்றிதழ் பெற்று அழைப்பாணை அனுப்பினோமா என்றால் இல்லை. முனியாண்டி, திருப்பதி, ராமு ஆகியோர்களது வாரிசு சான்றிதழ் பெறப்பட்டு அவர்களுக்குண்டான அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்றால் நான் கொண்டு வந்த கோப்புகளில் வாரிசு சான்றிதழ் இல்லை. மேற்படி உத்தரவில் உண்மையிலேயே மேற்படி வாரிசுகள் அனைவருக்கும் அழைப்பாணை அனுப்பியிருந்தாலும் இந்த உத்தரவில் அது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ 7 ஆவணத்தில் கணபதி என்பவரின் வாரிசாக ராஜேந்திரன், தேவராஜ், பாண்டியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பாண்டியம்மாளுக்கு அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்யவில்லை. சா.சா.ஆ 17, 18 ல் வில்லங்க சான்றிதழை சரிபார்த்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் வில்லங்க சான்று பார்த்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. சா.சா.ஆ 18 ல் பட்டா ரத்து செய்வதற்காக அனுப்பப்பட்ட மனுவில் சொத்து சம்பந்தப்பட்ட நபர்கள் அனைவரிடமும் வாரிசு சான்றிதழ் முழுமையாக பெறாமல் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பாமல் அவர்களிடம் வாக்குமூலம் எதுவும் பெறாமல் பிறப்பிக்கப்பட்ட 25.11.2022 ம் தேதிய விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**( சாட்சி தரப்பில் ஆவணங்கள் கொண்டு வர கால அவகாசம் கோரி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.)**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.